செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

# சுவடியியல் புலம்

**நடத்தும்**

# செவ்வியல் இலக்கண, இலக்கியப் பதிப்புகளில் பாடவேறுபாடுகள்

## பயிலரங்கம் – 3

**(06.07.2022 – 12.07.2022)**

**அறிவிப்பும் அழைப்பும்**

தமிழ் மொழி மிகத் தொன்மையானது. பேச்சு, எழுத்து என இருவகையான வழக்குகளைக் கொண்ட இம்மொழிக்கு இலக்கணத்தை வகுத்தவர் தொல்காப்பியர். அவர் காலத்திற்கு முன்னரே இலக்கண, இலக்கிய நூல்கள் இருந்தன என்பதற்கு ‘மொழிப’, ‘என்மனார்’ என்று கூறும் சான்றுகளால் அறிந்து கொள்ளலாம். இன்று கிடைக்கும் நூல்களுள் காலத்தால் முந்தையது தொல்காப்பியமாகும். இந்நூலில் தமிழ் எழுத்துகளின் வரி வடிவம் குறித்துக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் கருங்கல், பனையோலை முதலான எழுது பொருள்களில் நூல், ஆவணம் ஆகியவற்றை எழுதி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

முன்னோர்கள் பெரும்பாலும் இலக்கணம், இலக்கியத்தை ஓலைச்சுவடியில் எழுதி வைத்தனர். அவ்வாறு எழுதிய ஓலைச்சுவடிக்குச் சில காலம் கழித்துச் சிதைவு, முறிவு ஆகியன ஏற்படும். அதனால் அவ்வோலைச்சுவடியில் இருந்ததை அப்படியே எழுதி மாற்று ஓலைச்சுவடியில் வைத்தனர். மாற்று ஓலைச்சுவடியில் எழுதுதலால் பிழையான மாற்றுப் பாடங்கள் ஏற்படுவதுமுண்டு. மாற்றுப்பாடங்கள் பழைய உரையாசிரியர் காலத்தில் இருந்தது என்பதற்கு அவர்களுடைய உரையில் மாற்றுப் பாடங்களை மறுத்தலால் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு மூல நூல்கள் ஓலைச்சுவடியின் வழியாகக் கைமாற்றப்பட்டு 19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை நீடித்தது. அதன் பிறகு அச்சுப் பொறி கண்டுபிடிப்பால் ஓலைச்சுவடிகளாய் இருந்த நூல்கள் அச்சில் பதிப்பித்தலுக்கு வழி வகுத்தன.

அச்சில் நூல்களைப் பதிப்பித்தலில் சுவடிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தது. சுவடியில் எழுத்துகள் தொடர்ச்சியாக எழுதியிருத்தல், மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியின்மை, ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாடின்மை, துணைக்கால், ரகர வேறுபாடின்மை முதலானவற்றோடு சுவடிப் பாடங்களைப் பல்வேறு சுவடிப் பாடங்களோடு ஒப்பிடும்பொழுது பாட வேறுபாடுகளும் இருந்தன.

பதிப்பாசிரியர் யாப்பு, தொடரமைப்பு, ஒப்புமைத் தொடர் முதலானவற்றை உட்படுத்திப் பாட வேறுபாட்டில் மூல பாடத்தை அறிந்து பதிப்பிப்பர். சில பதிப்பாசிரியர்கள் மறுக்கும் பாடங்களை அடிக்குறிப்பிலும் சுட்டுவர். இதனால் ஒரு நூலைப் பல்வேறு சுவடிகளைக் கொண்டு பதிப்பாசிரியர் பலர் பதிப்பித்திருந்தால் அந்நூலுக்குரிய பாடவேறுபாடுகள் பல இருக்கும். இவை பதிப்புகளால் ஏற்பட்ட பாடவேறுபாடுகளாகும். இவ்வாறு பதிப்புகளில் காணப்படும் பாடவேறுபாடுகள் அனைத்தும் செம்பதிப்பு உருவாக்கத்திற்கு அடிப்படைச் சான்றுகளாய் அமைகின்றன.

சுவடிப் பதிப்புகள் சுட்டியுள்ள பாடவேறுபாடுகளில் எது மூலபாடம் என்பதை அறிந்து கொள்வதற்கும் அப்பாடவேறுபாடுகள் செம்பதிப்பு உருவாக்கத்திற்கு எந்த வகையில் துணை செய்கிறது என்பதை நோக்குவதும் மிகவும் இன்றியமையாததாக அமைகிறது. இவ்வகை ஆராய்ச்சி முயற்சியால் பதிப்புகளில் பாடம் வேறுபட்டு இருப்பதை அறிந்து கொள்வதோடு பாடவேறுபாடுகள் குறித்த புதிய ஆராய்ச்சிக்கும் வழி வகுக்கும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செவ்வியல் நூல்களாக வரையறுத்துள்ள தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் தமிழ் நூல்களுக்கும் செம்பதிப்பை உருவாக்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. செம்மொழி நிறுவனச் செம்பதிப்பு ஆக்கத்திற்குப் பதிப்புகளில் பாடவேறுபாடுகள் பெருந்துணையாக அமைகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு ‘செவ்வியல் இலக்கண, இலக்கியப் பதிப்புகளில் பாடவேறுபாடுகள்’ என்னும் பொருண்மையிலான இப்பயிலரங்கைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியல் புலம் நடத்தவுள்ளது. இத்துறை சார்ந்த கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

இப்பயிலரங்கமானது பதிப்புகளில் பாடவேறுபாடுகள் செம்பதிப்பு ஆக்கத்திற்குத் துணைசெய்யும் வகையில் அத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு 06.07.2022 முதல் 12.07.2022 ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிரலரங்கு நடைபெறும் நாட்கள்: 06.07.2022 முதல் 12.07.2022 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை 10.00 – 01.00 & மாலை 02.00 – 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து **workshopc@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்து கொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி / அலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 30.06.2022. கால தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தெர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 01.07.2022 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

सत्यमेव जयते

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## சுவடியியல் புலம்

**செவ்வியல் இலக்கண, இலக்கியப் பதிப்புகளில் பாடவேறுபாடுகள்**

**<u>பயிலரங்கம்</u>**

**(06.07.2022 – 12.07.2022)**

**விண்ணப்பப் படிவம்**

நிழற்படம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்</td><td>தமிழ்</td><td colspan="6"></td></tr>
<tr><td>ஆங்கிலம்</td><td colspan="6"></td></tr>
<tr><td rowspan="2">2.</td><td colspan="2">பதவி / பணிநிலை</td><td colspan="6"></td></tr>
<tr><td colspan="2">நிரந்தரம் / தற்காலிகம்</td><td colspan="6"></td></tr>
<tr><td>3.</td><td colspan="2">பிறந்த நாள் / வயது</td><td colspan="6"></td></tr>
<tr><td>4.</td><td colspan="2">பாலினம்</td><td colspan="6"></td></tr>
<tr><td>5.</td><td colspan="2">வகுப்பு (➨)</td><td>பொது</td><td></td><td>இ.பி.வ.</td><td></td><td>பட்டியல் இனத்தவர்</td><td></td></tr>
<tr><td>6.</td><td colspan="2">கல்வித் தகுதிகள்</td><td colspan="6"></td></tr>
<tr><td>7.</td><td colspan="2">பணியில் சேர்ந்த நாள்</td><td colspan="6"></td></tr>
<tr><td>8.</td><td colspan="2">நிறுவன முகவரி<br>(தொலைபேசி / மின்னஞ்சல்<br>முகவரியுடன்)</td><td colspan="6"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 9. | **இல்ல முகவரி (தொலைபேசி / மின்னஞ்சல் முகவரியுடன்)** | |
| 10. | **புலன எண்** | |
| 11. | **சிறப்பறிவு பெற்றுள்ள துறை** | |
| 12. | **முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு** | |
| 13. | **தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம் / இல்லை ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும்.** | |

**(கையொப்பம்)**

நாள்:

இடம்:

**உரிய முத்திரையுடன்**

**முதல்வர் / பதிவாளரின் கையொப்பம்**